செய்தி வெளியீடு எண்:107 நாள் :17.02.2016

# பத்திரிகைசெய்தி

வாக்காளர் விழிப்புணர்வு தொடர்பாக நடத்தப்பட்டு வரும் நிகழ்வுகளின் தொடர்ச்சியாக சென்னை மாநகராட்சியில் உள்ள முக்கிய இடங்களான 60 பஸ் நிறுத்த இடங்களில் (98 பஸ் நிறுத்தங்களில்) வாக்காளர் விழிப்புணர்வு விளம்பரங்கள் வைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக ராணிமேரிகல்லூரி எதிரில், காய்தேமில்லத் கல்லூரிசாலை, தினத்தந்தி அலுவலக சாலை, கோ–ஆப் டெக்ஸ், எழும்பூர் சாலை, மவுண்ட் ரோடுஅண்ணாசாலை, மாநிலகல்லூரிமற்றும் உட்லண்ட்ஸ் ஹோட்டல் சாலை ஆகிய பேருந்து நிறுத்தங்களில் வாக்காளர் விழிப்புணர்வு விளம்பரங்கள்வைக்கப்பட்டுள்ளன. இந்த இடங்களில்வைக்கப்பட்ட விளம்பரங்கள் அந்தப் பகுதியினை பயன்படுத்தும் பெரும்பாலான மக்களைக் கவரும் வண்ணம் அப்பகுதி தொடர்புடையவாறு அமைக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, கல்லூரி அருகில்வைக்கப்பட்டுள்ள விளம்பரம் கல்லூரி தொடர்பானதாகவும், குடியிருப்பு பகுதியில் வைக்கப்பட்டுள்ள விளம்பரம் அப்பகுதி தொடர்பானதாகவும் அமைக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் வைக்கப்பட்டுள்ள சில வாக்காளர் விழிப்புணர்வு விளம்பரங்களின் புகைப்படங்கள் பார்வைக்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.




லட்சுமியம்மா எப்போதும்
மெகா சீரியல் பார்க்க 100% ரெடி!
ஆனா வாக்களிக்க?!!
இவரைப் போல் இருக்காதீர்கள். 100% வாக்களிக்க தயாராகுங்கள்.
பெயரை பதிவு செய்ய: www.elections.tn.gov.in.
@TNelectionsCEO
TNElectionsCEO
#TN100percent
MTC BUS STOP
INCOME TAX OFFICE


கார்த்தியும் அவன் நண்பர்களும்
கட் அடிக்க 100% ரெடி!
ஆனா வாக்களிக்க?!!
இவர்களைப் போல் இருக்காதீர்கள். 100% வாக்களிக்க தயாராகுங்கள்.
பெயரை பதிவு செய்ய: www.elections.tn.gov.in.
#TN100percent




தலைமைத் தேர்தல்அதிகாரி
தமிழ்நாடு

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**